**Arimaa Nokku Journal** **ISSN: 2320-4842**
**(UGC Care Group-I Journal)** **Vol-18 No. 03 July-September 2024**

# தேவிபாரதியின் 'பலி' சிறுகதையில் ஆழ்மனச்சிக்கலுக்கு வழித்தேடல்

**சா.பிரியதரிசினி**
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
நவரசம் கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி
அறச்சலூர், ஈரோடு.

நெறியாளர்:
**முனைவர். பொ.இராதாஜெயலட்சுமி,**
நவரசம் கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி
அறச்சலூர், ஈரோடு.

**ஆய்வுச்சுருக்கம்:**

தேவிபாரதியின் புகழ்பெற்ற பலி சிறுகதையின் கதையாடல் தன்மையானது ஒடுக்குமுறையின், அநீதியின் வரலாற்றைத் தன்னகத்தே சுமக்கும் ஒரு தலித் இளைஞனும் பாலியல் தொழிலாளி ஆகிவிட்ட ஒரு பிராமணப் பெண்ணும் வாடிக்கையாளனாகவும் வேசியாகவும் சந்தித்துக் கொள்ளும் ஒரு சூழலின் மூலம் வரலாற்றை ஒடுக்குமுறையின் குறியீடாகக் கொண்டு நீதியைக் கட்டவிழ்க்கிறார் தேவிபாரதி. இதில் ஆழ்மனச் சிக்களுக்கு வழிதேடும் தேவிபாரதி இம்மானுடத்தின்பால் அவர் கொண்ட பரிவு புலனாவதை இக்கட்டுரை வழி ஆராயப்படுகிறது.

**முன்னுரை:**

இன்றைய மனித வாழ்வில் அறிவியலும், தொழில்நுட்பமும், நவீன நாகரீகமும் வளர்ந்து ஊடுருவி வந்தாலும் சாதியின் மீதான வன்மம் மட்டும் ஆண்டாண்டு காலமாக தொடர்ந்து கொண்டுதான் வருகிறது. இருப்பினும் பாலியல் தொழிலில் இத்தகைய நிலைபாடு பார்க்கபடவில்லை என்பதால் சாதியின் வன்மத்தை பாலியல் தொழிலுடன் ஒப்பிட்டு சாடுவதை இக்கட்டுரை வழி அறியலாம்.

**இலக்கியமும் உளவியலும்:**

இலக்கியமும் உளவியலும் வெவ்வேறு வகையான அணுகுமுறைகளைக் கொண்டு செயல்பட்டாலும் அவற்றின் அடிப்படை என்பது மனித மனம் மட்டுமே. இம்மனிதமனத்தின் எண்ணங்கள் அவற்றின் செயல்பாடுகள் போன்றவை ஒருவருடைய வாழ்வியல் சூழலுக்கு ஏற்ப மாற்றம் கொள்ளக்கூடியது.

சான்றாக,

> **“மனித உள்ளத்தைப் பற்றிய ஆய்வில் இலக்கியமும் உளவியலும் வெவ்வேறு அணுகுமுறைகளைப் பின்பற்றுகின்றன வெனினும் அவற்றின் கருவாக அமைந்திருப்பது மனித உள்ளமே”** 1

மேலும்,

> **“மனிதனின் அகவாழ்க்கையே இலக்கியத்தின் கருப்பொருளாகிறது”** 2

என வை.சச்சிதானந்தன் கூறுவதுபோல் இலக்கியத்திற்கும் உளவியலுக்கும் மனிதமனமே கருப்பொருளாகச் செயல்படுவது தெளிவுபடுகிறது.

**சாதியின் வன்மம்:**

தொழில் அடிப்படையில் உருவானதே சாதி என்றும் கட்டமைப்புகள். அதுவே காலப்போக்கில் தொழில்மறைந்து சாதியின் வன்மம் மேலோங்கிவிட்டது. இத்தகைய மாறுபாட்டால் உயர்ந்த சாதிக்காரர்களுக்குத் தாழ்த்தப்பட்ட மக்கள் கொத்தடிமைகள் போல் அவர்கள் ஏவல் செய்யும் வேலைகளை மறுக்காமல் விருப்பமில்லை என்றாலும் மனதளவில் சகித்துக்கொண்டு செய்யவேண்டிய கட்டாயச்சூழல் உருவாக்கப்பட்டுள்ளது.

சான்றாக,

> **“உன் முன்னோர்களின் மலத்தொட்டியைச் சுத்தம் செய்தார்.**
> **அவர் அவரும் என் தகப்பனாரும் ஏன் எங்களுடைய**
> **எல்லா மூதாதையர்களுமே அதைத்தான் செய்து கொண்டிருந்தனர்”** 3

எனத் தேவிபாரதி தனது ‘பலி’ சிறுகதையில் கொத்தடிமைத்தன்மையை சாடுகிறார். இத்தகைய இழிவுநிலையில் இருந்து மீண்டுவர வேண்டியே பாரதியாரின் கவிதைவரியானது.

> **“சாதிகள் இல்லையடி பாப்பா - குலத்**
> **தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்”** 4

எனக் குறிப்பிடுகிறார். மேலும் சாதிப் பாகுபாடு குறித்து பலரும் எழுத்தின் மூலமாகவும், பேச்சு மூலமாகவும் தன்னுடைய ஆழ்மனத்தில் பதிந்த சாதிப்பாகுபாட்டை மறைமுகமாக சாடுகின்றனர். இருப்பினும் உடலில் ஓடும் குருதி போல் மக்கள் மனத்தில் சாதிப்பாகுபாடு தொடர்ந்து கொண்டுதான் வருகிறது. இவற்றால் தற்கொலை, கொலை போன்ற செயல்கள் தொடர்ந்து கொண்டு வருவதை ஊடகங்கள் வாயிலாக இன்றளவும் இவ்வன்மம் தொடர்ந்து கொண்டு வருவதை ஊடகங்கள் சான்றுரைக்கின்றது.

**கற்பின் தன்மை:**

மனித வாழ்வில் கற்புநெறி என்பது ஒருவனின் ஒழுக்கத்தை உயர்வுபடுத்தியே அமைகிறது இதை அடிப்படையாகக் கொண்டு இருவகையாகப் பிரிப்பர். அதில் கருத்து ஒருமித்து இருவர் இணைந்து வாழும் இல்லறம் கற்பு எனவும், போலியாக நட்புப் பாராட்டும் பாலியல் தொழில் என இரண்டாகப் பிரிக்கப்படுகிறது. இத்தகைய பாலியல் தொழிலின் தன்மையை குறிப்பிடுகையில்,

> **"வாடிக்கையாளர்களைத் தக்க வைத்துக் கொள்ளும் பொருட்டு பேசியதைவிட அதிகமாக டிப்ஸ் பெறவும் சில சமயங்களில் குமட்டலெடுக்கும் அளவுக்கு கூட நடந்து கொள்வார்கள்"** 5

எனப் போலிக் கற்பைக் குறிப்பிடுகிறார். ஆனால் ஒருபெண் விதியின் வசத்தால் இத்தகைய இடத்தில் மாட்டிக்கொண்டால் அவளின் ஆழ்மனம் படும் சிந்தனை ஒட்டத்தை புவனேஷ்வரி அவர்கள் குறிப்பிடுகையில்,

> **"நாம் கடந்து வந்தபாதையை திரும்பிப்பார்க்கும் போது அந்தப்பாதை தருகின்ற நினைவுகள் நமக்கு சந்தோஷத்தைத் தர வேண்டுமே தவிர குற்ற உணர்வைக் கொடுக்கக் கூடாது"**6

என மனத்தின் நிலைப்பாட்டைக் குறிப்பிடுகிறார். முன்பு அவளின் குடும்பம் தனது குடும்பத்திற்கு செய்த கொடுமை தான் இன்று என்முன்பு வேசியாக நிற்கிறாள். இருப்பினும் கற்பின் தன்மை என்பது இருவருக்கும் பொதுவாகவே பார்க்கப்படுகிறது. தாழ்த்தப்பட்டவர், உயர்ந்த சாதி என்பது கற்பின் தன்மையில் சமமாகவே பார்க்கப்படுகிறது.

**உடல் மீதான வன்மம்:**

பெண்மையை போற்றும் போது பூவினும் மென்மையானவள் என்று வருணனை செய்யும் இச்சமூகம் இன்னொருபுறம் பெண்ணின் உடல்மீதான வன்மம் மட்டும் ஆண்டாண்டு காலமாக தொடர்கிறது. அதிலும் உயர்ந்த சாதி ஆண்களின் பார்வையில் தாழ்த்தப்பட்ட பெண்களின் மீதான வன்மம் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. இத்தகைய வன்மத்தை எதிர்க்கவே 'பலி' என்னும் கதையில் உயர்ந்த சாதிப் பெண்ணை விதியின் வசத்தால் பாலியல் தொழிலில் வந்தபோதும் கூட அவள்மீது இரக்கம்காட்ட மனம் மறுக்கிறது. ஏனெனில் அவளுடைய முன்னோர் தன் மூதாதையர்களுக்கு செய்த கொடூரம் தன் கண்முன் காட்சியாக நிற்கின்றது. இம்மனத்தின் குமரளை வெளிக்காட்டவே தேவிபாரதி பல செய்திகளையும் பட்டியலிட்டு குறிப்பிடுகிறார்.

சான்றாக,

> **"உயர்ந்த ஆன்மாக்க ளென்று உங்களைச் சொல்லிக் கொள்கிறீர்களே....... பசுவுக்கும், புறாவுக்கும் நீதி வழங்கியதாகத் தம்பட்ட மடித்துக் கொள்கிறீர்களே**

**எங்கள் குழந்தைகள் கிணற்றில் குறித்தபோது மின்சாரம் பாய்ச்சிக் கொன்றீர்களே....? கால்படி நெல்மணி அதிகம் கேட்டதற்காக, எங்கள் பெண்களையும், குழந்தைகளையும், இளைஞர்களையும் நெருப்பிலிட்டுப் பொசுக்கினீர்களே.....?**
**எங்கள் மக்களின் கண்களைக் குருடாக்கினீர்களே...........?**
**இதற்கெல்லாம் என்ன பிராயிசித்தம்....? எங்கே நீதி..................?” 7**

என்னும் வரிகள் மூலம் அன்றையகாலம் தொடங்கி இன்றுவரையிலும் நடக்கும் நிகழ்வுகளைக் காட்சிப்படுத்தி அவற்றிற்கு எல்லாம் நீங்கள் என்ன தீர்வு கூறப்போரீர் என தனது வரிகளில் சாதிக் கொடுமையைச் சாடுகிறார். இன்றைய காலகட்டத்திலும் இதுபோன்றதொரு நிகழ்வு ஏதேனும் ஓர் இடத்தில் நடந்த வண்ணம் இருக்கிறது.

மேலும் உயர்ந்த சாதியினர் முன்பு கைகட்டி நிற்பதும், மேலாடை போடக்கூடாது, காலில் செருப்பு அணியக்கூடாது, கோவிலுக்குள் செல்லக்கூடாது, துண்டை கைஅக்கிலில் வைத்துக்கொள்வதும் என அவர்கள் ஏவல் செய்யும் வேலையை தட்டாமல் செய்வது, உயர்ந்த சாதியினரின் இச்சைக்கு உட்படல் என்ற வழக்கம் இன்றளவும் கிராமங்களில் நடந்துகொண்டுதான் இருக்கிறது. இத்தகைய நிலைக்கு நீதிகேட்கவே தனது படைப்பின் வழி உயர்ந்த சாதிப் பெண்ணின் மீது வன்மத்தை வெளிக்காட்டியுள்ளார்.

**எண்ணம் - செயல்பாடுகள்:**

எண்ணங்களுக்கும் செயல்களுக்கும் இடையே ஆன ஒரு விதிப்போராட்டம் நிகழ்கிறது. அதாவது கதையின் முடிவு எப்படியிருக்குமென யூகிக்கச் சொல்கிறார் வாசகர்களிடம். இத்தகைய இடங்களில் நீங்கள் விரும்புகிறீர்கள் என்று வாசகர்கள் எண்ணத்தின் செயல்களுக்கு கதையின் முடிவை விட்டுவிடுகிறார் தேவிபாரதி.

**ஒடுக்குமுறையின் குறியீடு:**

‘பலி’ என்னும் இக்கதையின் மூலம் ஒடுக்குமுறையின் குறியீடாகக் கொண்டு நீதியைக் கட்டவிழ்க்கிறார் தேவிபாரதி. இங்கு சாதி என்பது மானுடத்தை அரித்துக்கொண்டிருக்கிறது. இது அழிவின் அறிவிப்பாக முன்வைக்கிறார். இவருக்கு மானுடத்தின்பால் உள்ள பரிவும் மக்களின் ஆழ்மனச் சிக்கல்களுக்கு வழிதேடுகிறது இச்சிறுகதை என்பது தெளிவுபடுகிறது.

**முடிவுரை:**

மனித மனத்தினுள் மறைந்து இருக்கும் சாதிவன்மம், உடல்மீதான வன்மம் இச்சையின் நிலைபாடு , பாலியல் தொழிலின் நிலைபாடு, போன்றவற்றை எளிதில் வெளிக்காட்ட முடியாது. அவையாவும் ஒருவரின் மனத்தினுள் மறைந்தே இருக்கும் அத்தகைய உணர்வுகளை பிற தூண்டல்களில் வழியே காட்சிப்படுத்தமுடியும். இவ்வாறு செயல்படாமல் நினைந்த இடத்தில் தன்கருத்தை வெளிப்படுத்தினால்

அவனைச் இச்சமூகம் பைத்தியக்காரன் என்கிறது. ஆதலால் தான் படைப்பாளர்கள் தனது மனத்தின் வெளிப்பாட்டை படைப்பின் வழி சாடுவதை இக்கட்டுரைவழி அறியமுடிகிறது.

**சான்றாதாரங்கள்:**

1. செ.சாரதாம்பாள் - இலக்கியமும் உளப்பகுப்பாய்வும் ப-5
நியூ செஞ்சுரிபுக் ஹவுஸ்(பி) லிட்..
முதல் பதிப்பு : ஜூலை,2017
2. மேலது - ,, ப-6
3. தேவிபாரதி - வீடென்ப காலச்சுவடு பதிப்பகம்
முதல் பதிப்பு. டிசம்பர் 2013 ப-86
4. பாரதியார் - பாரதியார் கவிதைகள்
பூம்புகார் பதிப்பகம் பதினான்காம்
பதிப்பு செப்டம்பர் 2007 ப-222
5. தேவிபாரதி - வீடென்ப காலச்சுவடு பதிப்பகம்
முதல் பதிப்பு. டிசம்பர் 2013 ப-80
6. புவனேஸ்வரி - திறமையை பட்டைதீட்டுங்கள்
அறிவுப் பதிப்பகம் முதல் பதிப்பு
நவம்பர் 2016 ப-49
7. தேவிபாரதி - வீடென்ப காலச்சுவடு பதிப்பகம்
முதல் பதிப்பு. டிசம்பர் 2013 ப-91